


# தேவதாயின் குரல்

"இறுதியில் எனது மாசற்ற இருதயம் வெற்றி கொள்ளும்"

FOR PRIVATE CIRCULATION ONLY

குரல்: 9 யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 1997


## அணுயுகமும் தேவதாயின் சமாதானத் திட்டமும்

ஆசிரியருரை :-

3ம் மிலேனியத்தின் சவால்கள், அதன் தொழில்நுட்ப முன்னேற்றங்களினதும், அவை பெற்றுத் தந்திருக்கும் நுகர் பொருள் கலாச்சாரம் பெற்றெடுக்கும் யந்திர மனிதனிலும் அடங்கி இல்லை.

21ம் நூற்றாண்டு மனிதன் அபார ஆக்கமும், பயங்கர அழிவு சக்தியும் படைத்தவன் 1945ம் ஆண்டு ஆகஸ்ட் 6ம், 9ம் திகதிகளில், அமெரிக்க போர் விமானங்கள், ஒரு 'கிறிக்கற்' பந்தளவு யுரேனியம் கொண்ட அணுக்குண்டை, மக்கள் செறிந்து வாழ்ந்த கிரோஷிமா, நாகசாக்கி நகரங்கள் மீது போட்டன. விமானி கண்டது, ஆயிரம் சூரியன்களின் பிரகாசத்திற்கொத்த மின்னல் வெளிச்சத்தை. தான் குண்டு வீசிய முதல் தினத்திலே மட்டும் 73,000 பிணங்கள் அணுவெப்பத்தில் வெந்து கருகின எனப் பின்னர் கேள்வியுற்ற விமானி, சித்தப்பிரேமை பிடித்த மன நோயாளி ஆனான்.

இன்றும் நாளையும் புதிய புதிய, பன் மடங்கு சக்திவாய்ந்த அணு, ஐதரசன், மெகட்டன் குண்டுகளை, வல்லரசுகள் ஆயத்தம் பண்ணிப் பரீட்சிக்கின்றன. வருங்காலப் போர்கள் எவ்வளவு பயங்கரமானவை என்றால், பத்திமாவில் தேவதாய், ''மனந் திரும்பாவிடில் ஓர் புதிய யுத்தம் பிறக்கும். பல நாடுகள் அழிந்து போகும். பஞ்சம் கொள்ளை நோய்கள் பரவும். பல ஆன்மாக்கள் நித்திய கேட்டுக்குள்ளாகும்'' என்றாள்.

இதனால்தான் பாப்பிறை நவீன யுத்தத்தின் பயங்கரம் என்னவென்றால் அதை எவரும் எக்காரணத்தையிட்டும் நீதிப்படுத்த முடியாது'' என்றார்.

ஆகவேதான் 'சமாதானமா'? ...... 'போரா'? ... என்ற இருமுனைகளுக்குள் அல்ல, இப்பூமியில் மனிதன் வாழ்வதா? அழிந்து நிர்மூலமாவதா? என்ற பிரச்சனைகட்கே தீர்ப்பு வேண்டும். இன்று நம் வாழ்வு, பலாத்காரத்தினால் மூழ்கடிக்கப்பட்டு வருகிறது. அது நம் உள்ளும் புறமும் சமாதானத்தை உள் நுழையவிட மறுக்கிறது.

இதற்கு மாற்று மருந்தாக தேவதாய் நம்முன் வைக்கும் திட்டமே, செபம் தபம் .. பரித்தியாகம் .. இவற்றில் இருந்து உருவாவதே மன்னிப்பு; நீதி; அன்பு; ஒப்புரவாகுதல்; புரிந்துணர்வு. இவை பெற்றுத்தரும் கனி, சமாதானம். தூய்மை நிறை உள்ளத்தின் கொடை, மனம் வாக்கு காயம் பரிசுத்தமாக விளங்குதலே.

சமாதானம் செய்வோராக... சொல்வோராக அல்ல... இன்றே மாறுவோம். தேவதாயின் திட்டப்படி.

பத்திமாவில் 1917 ஆகஸ்ட் 13ல் அன்னையின் காட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பிய ஆட்சியாளர்கள் காட்சிச் சிறுவர்கள் மூவரையும் கடத்திச் சென்று காவலில் வைத்தனர். தேவதாயின் திட்டம் இதனால் சிதைவுறவில்லை. காட்சிச் சிறுவர்கள் விடுதலை பெற்றபின் ஆகஸ்ட் 19ல் வலினோஸ் என்னுமிடத்தில் தேவதாய் அவர்கட்கு காட்சி தந்தாள்.

அன்னையின் திட்டங்களை முறியடிக்க, மூழ்கடிக்க, அலகை எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் இறுதியில் அன்னையே வெற்றியடைவாள் என்பது இதனால் புலனாகிறதல்லவா?

## நீதி நிறைந்த யூபிலி

''கிறிஸ்துவின் சமூகப் படிப்பினைகளை எத்தனை கிறிஸ்தவர்கள் அறிந்து கடைப்பிடிக்கின்றனர்.'' என்ற பாப்பிறையின் கேள்வியே, 3ம் மிலேனியத்தின் முக்கிய கேள்வியாகும். யூபிலியை வெறும் கருத்தரங்குகள், வழிபாடுகள், மறை உரைகளில் அடக்கிவிட முடியாது. அதுகிறிஸ்துவின் உலக முடிவு பரியந்தம். சிறிய ஒடுக்கப்பட்ட துன்புறும் பசி, பிணி, நிர்வாணம், விலங்கு இவற்றுடன் பின்னிப்பிணைந்த யதார்த்தமான சவால்களையும், அதற்கு யேசுவின் அன்பின் நிமித்தம் பகரப்படும் விடைகளையும் பொறுத்து இருக்கிறது.

''என் அயலான் யார்?'' என்ற வினாவிற்கு, வீதியில் குற்றுயிராய்க் கிடக்கின்ற யூதனையும், குதிரையை விட்டு இறங்குகின்ற சமாரியனையும் சுட்டிக் காட்டுகிறார் யேசு.

கோவில் வழிபாடுகள், கேளிக்கை களியாட்டங்கள், கொண்டாட்டங்கள் விழாக்கள் - அயலானைத் தேடும் அழைப்பிலிருந்து எம்மைத் திசை திருப்பலாம் என்ற உண்மையை, குற்றுயிராய்க் கிடப்பவனை விலக்கித் தம் வழியே விரைந்து செல்லும் குருவும், லேவியும் எண்பிக்கிறார்கள்.

வன்னியிலே குண்டுமழை, போர் நடவடிக்கை காரணமாக வீதியோரங்களில் மர நிழல்களில் தங்கி, உணவு பற்றாக்குறை, மருந்து தட்டுப்பாடு, அடிப்படை வசதிகள் இல்லாமை ஆகிய துயரங்கள் அத்தனையையும் தாங்கி, தமிழ் பெரு நிலப்பரப்பில் வனவாசம் செய்கின்ற தமிழ் மக்கள் நம் அயலவர்கள் அல்லவா? கடவுள் பெயரால், குருக்கள் பெயரால் நம் குடும்பத்தவர் பெயரால் விழாக்கோலம் பூண்டு ஆடம்பர, படாடோப நிகழ்ச்சிகள் தயாரித்து கேளிக்கை களியாட்டங்களில் பொழுதுபோக்கு தலை எந்தமுறையில் நியாயப்படுத்துவது? இந்த உல்லாசிகளை, குற்றுயிராய்க் கிடந்த யூதனைக் கடந்து சென்ற குருவோடும் லேவியோடும் ஒப்பிடுவதில் என்ன தவறு இருக்கிறது?

(4ம் பக்கம் பார்க்க

# அடொல்போ பெரேஸ் எஸ்குவிலேல்

இவர் இலத்தீன் அமெரிக்காவின் சாத்வீக இயக்கத்தில் பிரபல்யமான ஒருவர். இவ்வியக்கத்தில் இவர் தம்மை அர்ப்பணித்தமைக்கு கிடைத்த பரிசு சிறைத்தண்டனையும் சித்திரவதையுமே. சில ஆண்டுகட்கு முன்பு ஆர்ஜென்டினாவில் கைதுசெய்யப்பட்டு 15 மாதங்களாக சிறைக்கூடத்தில் பல்வேறு துயரங்களையும் அனுபவித்தார். அனைத்துலக அபிப்பிராயமும் இவர் பக்கமே இருந்தது. அத்துடன் பெற்றி வில்லியம்ஸ், பெறிகொறிகன் ஆகிய பிரமுகர்களின் ''நோபல் சமாதானப் பரிசுக்குரியவர்'' என்ற தெரிவும் இவரை சிறைவாசத்திலிருந்து மீட்டு, வீட்டுச் சிறைவாசத்துக்குக் கொண்டு வந்தன. பின் வீட்டுச் சிறைவாசமும் நீக்கப்பட்டது. பின் இவர் லத்தீன் அமெரிக்க நீதி, சமாதான சேவைக்குழுக்களின் இயக்குநரானார்.

இப் பெரியாரின் பொன்னான கருத்துக்கள் சில:-

செபம் :

பரிசுத்த வாரத்தின் முதலாவது தினத்தில் நான் சிறையில் அடைக்கப்பட்டேன். சிறைச்சாலையில் ஆன்மீகம், அறிவு சார்ந்த ஒழுக்க நெறிகட்கு கட்டுப்பட வேண்டும் என்பதை முதலில் தெரிந்து கொண்டேன். சிறையில் ஒருவன் நிர்வாணியாகவும், அனாதையாகவும் இருக்கிறான். அவனை அடையாளங் காட்டுவது அவனுக்குக் கொடுக்கப்படும் இலக்கம் மட்டுமே. எம்மை அங்கு அழியவிடாது மீட்டு வைப்பது செபம் மட்டுமே. முதலில் இறைவனின் நிரந்தர பிரசன்னத்தை உணர்வதிலும், இறைவனது மௌனத்துக்குச் செவிமடுப்பதிலும் நேரத்தைச் செலவிட்டேன்.

''நாம் காணும் காலத்தின் கோலங்களினூடாக இறைவன் எமக்குரைக்கும் செய்தி என்ன?''

இதுவே மிக முக்கியமானதாக இருந்தது. நான் வழமையாகச் செபித்த செபங்களையே தொடர்ந்தும் செபிக்க முயற்சித்தேன். ஆயின் சில சந்தர்ப்பங்களில் என்னுள் நானே ஒரு வரட்சி நிலையை ஏற்படுத்திக்கொண்டு, நான் அவருக்குச் சொல்ல வேண்டியவற்றைக் குறைத்து, அவர் எனக்குச் சொல்லுபவற்றைக் கேட்பதில் அதிக நேரத்தைச் செலவிட முயற்சித்தேன்.

நான் போய்க்கொண்டிருக்கும் பாதையின் நிகழ்வுக்குரிய அர்த்தங்கள் என்ன? கடவுள் என்னிடம் எதை விரும்புகிறார்? என்பவற்றை அறிய முயற்சித்தேன், என்னைப் பொறுத்தவரை இறைவனின் மௌனத்துக்குச் செவிமடுப்பதில் மிக முக்கியமானது, அவர் எமக்கு என்ன சொல்ல விரும்புகிறார்? நான் எதைச் செய்ய வேண்டுமென விரும்புகிறார்? என அறிவதே.

''செபம் ஒரு யந்திரமயமான செயலன்று. ஆயின் அது மிகப் பலம் வாய்ந்த சக்தி'' என்பதை நான் அனுபவ ரீதியாக அறிந்து கொண்டேன்.

சாள்ஸ் டி ஃபுக்கோவினுடைய 'பிதாவே! என்னை உமக்கே கையளிக்கிறேன்' என்ற செபமும், புனிதர் பிரான்சிஸ் அசிசியின், 'இறைவா! உம் சாந்தியின் கருவியாக என்னை ஆக்கியருளும்' என்ற செபமும், நான் செபித்தவற்றில் மிக முக்கியமானவை. நான் சில பாடல்களையும் பாடிவந்தேன். முக்கியமானது. 'மிகவும் இரக்கமுள்ள தாயே' என்ற பாடல்.

நான் கண்டுபிடித்த மற்றொரு உண்மைதான் நம்பிக்கை, சிறையிலே, எமது எதிர்ப்புக்குப் பலமாக விளங்கும் நம்பிக்கையின் திடமான உருவின் தாக்கத்தைக் கண்டு கொண்டேன். எனது சகோதர கைதிகளுடன் இந்த நம்பிக்கையை நான் பகிர்ந்து கொண்டேன். வேதனைகளினூடாக பலர் தமது மனிதத்துவத்தையும், தம் விசுவாசத்தையும் திரும்பவும் கண்டடைந்ததை நான் அவதானித்தேன். ஒருவன் தன் உண்மை நிலையைக் கண்டுகொள்கிற தருணமே, முக்கியமான தருணம் என நான் நம்புகிறேன். ஏனெனில் அவன் முழுமையாக வெறுமையாகின்றான். அங்கே அவன் தன் சுய ஆளுமையையும், கடவுளையும் தவிர வேறொன்றையும் காணமாட்டான்.

அகிம்சை :

வன்முறை ஆயுதபலத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒருவனை ஆள் என்ற நிலையிலிருந்து பொருள் எனும் நிலைக்கு மாற்றுகிறது. கொள்கைகளையும் பொருளாதார, அரசியல் இலாபத்தையும், மனிதனை விட முக்கியமாகக் கருதுகிறது. மனிதனை ஒருவன் மறக்கும்போது அவன் இறைவனையும் மறக்கிறான். மனித வாழ்வின் பெறுமதி பற்றிய உணர்வையே அவன் இழந்துவிடுகிறான். தனது குறிக்கோளை அடைவதற்காக எவ்வித மோசமான வழிமுறைகளையும் கையாளத் தயங்காத காரணத்தால் வன்செயல்கள், கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு படிப்படியாக ஏறிக்கொண்டே போகின்றன.

இந்நிலையில் சமாதானம் என்பது ஆயுதங்களின் பயமுறுத்தலில் தங்கியுள்ளது. அரசியலிலும் பொருளாதாரத்திலுமுள்ள அறநெறி நீக்கப்படுகிறது. செல்வம், மக்களின் வாழ்வை வளம்படுத்துவதைவிடுத்து அவர்களை அடக்கியாளவும் கொடுமைப்படுத்தவும் பயன் படுத்தப்படுகின்றது. பேரிடரும் அழிவும் நிறைந்த இந்நிலையில், அகிம்சையைப் பற்றிப் பேசுவது முட்டாள்தனமானதாக, யதார்த்தத்துக்கு ஒவ்வாத இலட்சிய வாதமாகத் தோன்றலாம்.

இறைவனின் வார்த்தை தெளிவாக, நேரடியாகக் கூறுகிறது. ''கொலை செய்யாதிருப்பாயாக.'' இது விதிவிலக்கின்றி அனைத்து மக்களுக்கும், ஏன் அரசாங்கங்களுக்குமே கூறப்பட்டதாகும். லத்தீன் அமெரிக்காவில் நடைபெற்று வரும் அகிம்சைப் போராட்டமானது. கிறிஸ்துவின் நற்செய்தியினுடைய சக்தியால் உயிரூட்டம் பெறும் ஒரு போராட்டமாகும். ஏழைகளின் ஆயுதம் அகிம்சையின் சக்தியே. அகிம்சையின் நோக்கம் மானிடவரலாற்றில், ஒரு ஆள் என்ற முறையில் மனிதனை மீட்பதுதான். எனவே விசுவாசக் கண்ணோட்ட வழியில் ஒரு நீதியுள்ள சகோதரத்துவ சமுதாயத்தை அமைப்பதற்கு மாற்றுவழிகளைக் கண்டுபிடிக்க முயலவும் உண்மையின் வலிமையும் கொண்டது.

எமது பிரதேசத்தில் கத்தோலிக்க திருச்சபையினுள் நன்கு விருத்தியடைந்துவரும் அடித்தளக் குழுக்கள் (Grassroots Communities) பற்பல புதிய அகிம்சை முயற்சிகளுக்குப் பளிக்காரமாக, ஊக்குவிப்பாக விளங்குகின்றன. இக் குழுக்கள் தமது கிறிஸ்தவ விசுவாசத்தினால் வழிநடத்தப்பட்டு, தாம் பின்பற்றக்கூடிய வழிவகைகளையும், புதிய மாற்றுவழிகளையும் கண்டுபிடிக்க முயல்கின்றன.

அகிம்சை ஒரு போராட்டம் மட்டுமல்ல. அது வாழ்க்கையைப் புரிந்துகொள்ளும் ஒரு முறையும் ஆகும். மனிதர்களின் வாழ்வையும் சமூக வாழ்வையும் புரிந்து கொள்ளும் ஒரு முறையாகும்.

கிறிஸ்துவின் நற்செய்தி வெளிப்படையானது. சிக்கலற்றது. எமது சிறுமை அச்சங்கள், குறைபாடுகள் மத்தியிலும் அதை எமது முழு வாழ்விலும் நாம் வாழ வேண்டும். ''இவ்வுலகில் நீங்கள் துன்பம் அடைவீர்கள். ஆனால் சோர்வடைய வேண்டாம். நான் உலகை வெற்றி கண்டுள்ளேன்'' என்றும், ''விதை செத்து மடிந்தாலொழிய அது கனி கொடாது'' என்றும் நமதாண்டவர் கூறியுள்ளார்.

புனித சின்னப்பர் கூறுவதுபோல, கிறிஸ்தவர்கள் ''சிலுவை என்னும்

(4 ம் பக்கம் பார்க்க)

# தேவதாயின் அற்புத வரலாறு (தொடர்ச்சி)

தேவமாதா கற்புடைய சூசையப்பருடன் மணம் முடித்துக்கொண்ட வரலாறு வருமாறு:

தேவமாதாவைச் சம்மனசுக்கள் தேவாலயத்துக்குக் கொண்டுவந்தபோது அவள் அவர்களை நோக்கி தான் தன் திவ்விய பத்தாவின் சமூகத்தைப் பார்க்க விக்கினமாங் குற்றமேதென்று தனக்குக் காட்டவேண்டுமென அன்போடு கேட்டாள். இந்த முறைப்பாட்டைச் செவியுற்ற பரமகடவுள் தன் தெய்வீகத்தை மறைவிடமாக்கி ஓர் காட்சியில் அவளுக்குத் தரிசனையாகி அவள் இருதயத்திலடைந்த இருளை நீக்கி அதை மேலான இன்ப ஆறுதல்களால் நிரப்பினார். அவளுக்குப் பன்னிரண்டு வயதும் ஆறு மாசமும் நடக்கையில் வேத புத்தகத்தில் சர்வேஸ்வரன் ஈசாக்கென்ற ஏக புத்திரனைத் தமக்குப் பலியிட ஆபிரகாம் என்பவருக்குக் கட்டளையிட்டதாகச் சொல்லியதை ஒத்த ஓர் காரியம் இவளுக்கும் சம்பவித்தது. சர்வேஸ்வரன் சம்மனசுக்கள் முன்பாகத் தான் எப்பொழுதும் கற்புடைய மங்கையாயிருப்பேனென்று வாக்குத்தத்தம் செய்து இந்தக் கற்பென்ற மேலான லில்லி என்னும் புஷ்பத்தைக் காப்பாற்றுவதை விட தனக்கு இன்பமானதொன்றும் இல்லை என்றிருந்தாள். ஆனால் சர்வேஸ்வரன் அவள் தெய்வத்தின் தாயாகத் தெரிந்தெடுத்துக் கொள்ளப்பட்டவள் என்று அறிவிக்காமல் அவள் கலியாண அந்தஸ்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று மாத்திரஞ் சொன்னார். திடும்பிரவேசமாய் இந்தக் கட்டளையை அறிந்த தேவமாதா மிகவும் மனம் நொந்து விதனப்பட்டாலும் தான் ஒன்றும் தீர்மானிக்காமல் ஆபிரகாம் என்பவரைப் பார்க்க அதிக திடன் கொண்டு சர்வேஸ்வரன் சித்தமாகட்டுமென்றிருந்தாள் கடவுளானவர் சிமெயோனென்பவர் நித்திரைபோகையில் சொர்ப்பனத்தில் ஜாவாக்கினென்பவரின் புதல்விக்கோர் மணவாளனைத் தேடவேண்டுமென்றார். உடனே குருப்பிரசாதிகள் சாஸ்திரிகள் முதலானவர்களைச் சங்கங் கூட்டி இவள் தாய் தகப்பனற்ற பெண். இவளுக்குக் கலியாணஞ் செய்துகொள்ள மனமில்லை. அப்படி இருந்தாலும் ஓர் பெண் தனக்கோர் அந்தஸ்தைத் தெரிந்து கொள்ள முன் தேவாலயத்தை விட்டுப் புறப்படுவது உலக வழக்கத்துக்கு ஒவ்வாதபடியால் அவளுக்கோர் புருஷனைத் தேடுவது நன்மையென்று சொன்னார். அவளும் அதை அங்கீகரித்துக் கொண்டு சுவாமியால் இக்கன்னிக்கு குறிக்கப்பட்ட வாலிபனை தங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று சர்வேஸ்வரனை வேண்டிக் கொண்டார்கள், அந்தப்படியே ஓர் நாளைக் குறித்து அந்தத் தினத்திலே ஜெருசலேம் பட்டணத்திலிருக்கப்பட்ட தாவீதின் கோத்திரத்திலுதித்த வாலிபர் அனைவரும் தேவாலயத்தில் வரவேண்டுமென்று நிர்ணயித்தார்கள். தேவமாதாவின் பதினாலாம் பிராயத்தின் கடைசிநாளில் இது சம்பவித்தது. சிமெயோனென்பவர் திவ்விய கன்னிகைக்கு இச் செய்தியை வெளிப்படுத்தினார். இந்தச் செய்தியைக் கேட்டமாத்திரத்தில் தேவகன்னிகை அனுபவித்த விதனஞ் சொல்லிமுடியாது. கடவுளானவர் தனது கருணையாலவளைத் திடப்படுத்தா விட்டால். அந்தக் கணமேயவள் மரித்திருக்க வேண்டும்.

கூட்டம் கூடுவதற்கு ஒன்பது நாளுக்கு முந்தி இச் சமாச்சாரத்தைத் தேவமாதா அறிந்திருந்தாள். சர்வேஸ்வரன் சித்தம் தன்பேரில் நிறைவேறட்டும் என்று மகா சுறுசுறுப்புடன் வேண்டிக் கொண்டபோது சுவாமி அவளுக்குத் தரிசனையாகிச் சொன்னதாவது:-

''என் மாடப்புறாவே! நீ கஸ்திப்படாதே! உன்னிச்சைக்கும் மன்றாட்டுகளுக்கும் செவி கொடுக்கிறேன். குருப்பிரசாதி என் பிரகாசத்தைக் கொண்டே சகலமுஞ் செய்வார்கள். உன்னாசைக்கிணங்குமோர் மணவாளனை உனக்குக் கொடுப்பேன். என் வரப்பிரசாத உதவியும் உனக்குச் செய்வேன். என்னுடைய ஊழியர்களில் எனக்கு மிகவும் பிரியமான ஓர் மனிதனைத் தெரிந்து கொள்வேன். என்னுடைய வல்லமை முடிவற்றது. அது உன்னோடு எப்பொழுதும் இருந்து உன்னைப் பரிபாலனஞ் செய்யும் என்றார். இந்த இன்பமான வார்த்தைகளால் தேவமாதாவின் கஸ்தி தணிந்தது அவளும் தன் பரிசுத்தத் தனத்தைக் காப்பாற்ற வேண்டுமென சர்வேஸ்வரனையும் சம்மனசுக்களையும் வேண்டிக் கொண்டாள். அவர்களும் சர்வேஸ்வரன் வல்லமை அவள் பேரில் மட்டற்றதாய் இருக்கிறதென்று மொழிந்தார்கள். குறிக்கப்பட்ட நாளில் தாவீதரசன் கோத்திரத்திற் பிறந்த வாலிபரெல்லாரும் கூடினார்கள். அவர்களுடன் நசரேத்தூரிற் பிறந்து ஜெருசலேம் பட்டணத்தில் வசித்த சூசையப்பரும் இருந்தார். அப்போது சூசையப்பருக்கு முப்பத்துமூன்று வயது நடந்தது, அவர் சரீரத்தில் ஒரு குறையும் அற்றவர். மகா சவுந்தரியமுள்ள முகத்தைக் கொண்டவரும் இணையிடக் கூடாத உயர்ந்த மரியாதை உள்ளவருமாயிருந்தார். அவருக்குப் பன்னிரண்டு வயது நடக்கையிலே தான் கற்போடிருப்பதாக சுவாமிக்கு வார்த்தைப்பாடு கொடுத்தார். இவர் தேவமாதாவுக்கு மூன்றாம்முறை உறவாயிருந்தார். தேவ உதவியால் சகலத்தையும் செய்ய எண்ணித் தெய்வத்தின் உதவியை இரந்து மன்றாடத் தொடங்கவே சர்வேஸ்வரன் சிமெயோனென்பவருக்கு ஏவிச் சொன்னதாவது, வாலிபரனைவரும் தங்கள் தங்கள் கையில் ஓர் காய்ந்த தடியைப் பிடித்துக் கொண்டு சுவாமியின் சித்தம் நிறைவேறட்டுமென்று வேண்டிக் கொள்ளும்படியாய் சொல் என்றார். இவ்விதமாய் சகலரும் வேண்டுதல் புரிய சூசையப்பர் கைக்கோல் பூத்ததுமன்றி அவர் தலையின் மேலால் வெண்ணிறமான ஓர் மாடப்புறாவும் பறந்தது. அந்தச் சமயத்தில் சூசையப்பரின் உள்ளாந்தரங்கத்திற் கேட்ட சத்தமாவது ''எனது ஊழியனாகிய சூசையப்பரே! மரியம்மாள் உனக்கு மனைவியாய் இருப்பாள். அவள் மட்டில் தகுந்த சிரவணத்தோடு நடந்துகொள். ஏனென்றால் அவள் அவள் எனக்கு மகாபிரியமுள்ளவள், நீதியுள்ளவள், சரீரம், புத்தி விஷயத்தில் மகா பரிசுத்தமுள்ளவள். அவள் சொல்வதைச் செய்வாயாக'' என்பதே.

தேவ திருவுளப்படி தேவமாதாவைச் சூசையப்பருக்கு மனைவியாகக் கொடுத்தார்கள். தேவமாதா சிமெயோன் தீர்க்கதரிசினியாகிய அன்னம்மாளிருவர்களுடைய கரத்தை முத்தமிட்டு சில ஊழியர்களோடும் தன் பத்தாவோடும் தேவாலயத்தை விட்டு நசரேத்தென்னுஞ் சிற்றூருக்குச் சென்றார்கள். அவ்விடத்தில் தேசத்தின் முறைமைப்படி தங்கள் பந்துக்களையும் சிநேகிதரையும் சந்தித்து தங்களில்லிடம் சென்றார்கள். அப்போது தேவமாதா தான் இது வரையும் தனித்த மனிதனோடு சம்பாஷனை அற்றவளாயிருந்து இப்போது தனித்தவோர் மனிதரோடு பேசப்போகிறபடியால் சம்மனசுக்களை அதற்குச் சாட்சியாக இருக்க மன்றாடினாள். அவர்கள் யாவரும் கண்ணுக்குத் தோற்றும் விதமாய்த் தோன்றி அவள் வாயினின்று புறப்படும் வார்த்தைக்கு அதிக பலத்தையும் சூசையப்பர் இருதயத்தில் பிறர் சிநேகத்தையும் உண்டாக்கினார்கள். தேவமாதா அப்போது தனது பரிசுத்த பத்தாவை நோக்கி ''தான், என்றும் கன்னியாய் இருக்க வார்த்தைப்பாடு கொடுத்ததாகவும் அதை நிறைவேற்ற அவர் உதவி செய்ய வேண்டும் என்றும்'' கேட்டதனால் சூசையப்பரும் தான் பன்னிரண்டு வயதிலே சர்வேஸ்வரனுக்கு தன் கற்பைக் காப்பாற்றக் கொடுத்த வார்த்தைப்பாட்டை வெளியாக்கினார்.

இரண்டு துணைவர்களும் மகா ஆறுதலடைந்து தாங்கள் சர்வேஸ்வரனுக்குக்

( 4 ம் பக்கம் பார்க்க )

## நீதி நிறைந்த

(1 ம் பக்க தொடர்)

வன்னி நிலப்பரப்பிலிருந்து அண்மையில் ஆறுதல் தேடி ஓடிவந்தவர்கள் இங்கு நிலவும் சேளிக்கைகளை, சீர் கேடுகளைக்கண்டு உடலும் உள்ளமும் சோர்வடைந்து விட்டனர்.

யாழ்ப்பாணமே நரகமாகிவிட்டதா என்று வேதனைத் குரல் எழுப்பும் மீள் குடியேறிய பலர், மீட்கப்பட்ட மண் என்று சொல்லப்படும் இடத்தில் காணப்படும் ஒழுக்க சீர்கேடுகளையும் ஆன்மீக அழிவுகளையும் கண்டு வேதனைக் குரல் எழுப்புகின்றனர்.

ஆயுதபலத்தால், பயங்கரத்தால் சூழப்பட்டும் அதன் பயத்தை மறந்தது போன்று இங்கு வாழ்கின்ற வாழ்வு முறை கண்டு வெதும்புகின்றனர். மீள வந்தோர், நோவாவின் காலம் போன்று மாபெரும் ஆன்மீக அழிவை நோக்கி இந்த மண் விரைந்து கொண்டிருக்கிறது. மது, மஞ்சள் பிரசுரங்கள், ஆபாச ஏடுகள், ஒழுக்கக்கேட்டை உருவாக்கும் திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்வுகள் என்ற தீமையின் சக்திகள் வீறுகொண்ட சிங்கங்கள் போல இந்த மண்ணின் மைந்தர்களை அழிவுப் பாதைக்கு அழைத்துச் சென்று கொண்டிருக்கின்றன என்று வேதனைப்படுகின்றனர்.

நன்கு ஒழுங்கமைக்கப்பட்டு பக்தியருட்சியுடன் ஒன்பது நாட்கள் இறைவார்த்தைகளைக் கேட்டுத் தியானித்து இறைவனோடு ஒப்புரவாகி புதுவாழ்வுக்கு வழியமைத்துவிட்டு (வன்னிச் சகோதரர்கட்காக மன்றாட்டுகளும் செய்த்துவிட்டு) பத்தாம் நாளில் கோவில் திருவிழாவின் பின் பரிசுத்தத்தையே மாற்றியமைக்கும் வண்ணம் அளவுக்கு மிஞ்சிய உண்டாட்டுக்களியாட்டங்களும் ஆடல் பாடல்களும் நம் அயலவரின் (வன்னியின் அகதிகளின்) அவலங்களை மறந்துவிட்ட செயலாகும் எனப் பொருமுகின்றார். அண்மையில் இங்கு வந்தோர்.

இன்றைய எமது திருவிழாக்கள் வழிபாடுகள் வெறும் வெளிச்சடங்குகளாக மாறிக்கொண்டிருக்கின்றன.''

''உங்கள் திருவிழாக்களை நான் வெறுத்து அருவருக்கிறேன். உங்கள் வழிபாட்டுக் கூட்டங்களில் எனக்கு விருப்பமே இல்லை.'' (ஆமோ 5:21)

''என் முன்னிலையில் இரைச்சலிட்டுப் பாடும் பாடல்களை நிறுத்துங்கள் ..'' (ஆமோ 5:23)

''நீதி வெள்ளமெனப் பொங்கி வருக. நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்து வருக.'' (ஆமோ 5:24)

அடுத்த வீட்டுக்காரன் துக்கம் கொண்டாடுகையில் நாம் கேலிக்கைகளிலும் கொண்டாட்டங்களிலும் உல்லாசிக்கலாமா? உண்மையான தூய உள்ளம் கொண்ட ஒவ்வொருவரும் வன்னியில் துன்பப்படுபவர்களுடன் தான் இருக்கின்றனர். உள்ளத்தால் ஒன்றித்து அவர்கட்காக செபிக்கின்றனர். உடலால் ஒன்றித்து பரித்தியாக (ஒறுத்தல்) முயற்சிகளைச் செய்து அவலப்படுபவர்கட்காக ஒப்புக் கொடுக்கின்றனர். இது எமது துன்புறும் சகோதரர்கட்கு மன ஆறுதலையும் உறுதியையும் கொடுக்கும். எமது செபதபங்களும், பரித்தியாக முயற்சிகளும், அன்புச் செயல்களும் அலையலையாக எழுந்து ஆண்டவன் சந்நிதிக்கெட்ட வேண்டும். அப்போதுதான் இறைவனின் திருவருள் எம் வன்னிச் சகோதரர்கள் மேல் இறங்கும்.

வன்னிப் பெருநிலத்தில் பயங்கரப் போர்க்கால சூழ்நிலையில் அவதியுறும் எம் உடன்பிறப்புக்களின் உண்மை நிலையை எமது பத்திரிகைகளும் வானொலிகளும் தொலைக்காட்சிகளும் விபரமாக எடுத்துக்கூறவில்லை. சமாதானம் சகவாழ்வு என்று கூறுபவர்களும் ஆயுத பலத்தின் வெற்றியை மட்டுமே நம்பியிருப்பவர்களும் இங்கு அவதிப்படுவோருக்கு விமோசனம் அளிக்கப் போவதில்லை.

''உங்கள் நீதி, பரிசேயர் சதுசேயரின் நீதியை விட அதிகரிக்காவிடில் இறை அரசில் சேரமாட்டீர்கள். ''கிறீஸ்து உலகம் முடியும்வரை சிலுவையில் தொங்குகிறார்.''

நாம் இறுதிநாளில் எம் அன்பின் அளவையால்தான் அளக்கப்படுவோம். (தீர்ப்புப் பெறுவோம்)

தேவதாயின் சொரூபங்கள் கண்ணீர் வடிப்பதாக 1972 லிருந்து செய்திகள் அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றன. நியூ ஆர்லியன்ஸ் என்ற இடத்தில் விஞ்ஞானிகள் இக் கண்ணீரை பலதடவை ஆய்வுக்குப் பின் மானிடக் கண்ணீர் தானென நிரூபித்துள்ளனர்.

ஒரு தாய் ஏன் கண்ணீர் சிந்துகிறாள்? தன் பிள்ளைகளை நினைந்து, தன் புத்திமதிகள் அலட்சியம் செய்யப்படுவதை உணர்ந்தே கண்ணீர் சிந்துவாள்.

இன்று எம் மண்ணில் வளர்ந்துவரும் அக்கிரமங்களை – குறிப்பாக இயேசுவால் அன்பு செய்யப்படும் சின்னஞ்சிறிசுகட்கு இடறலாக இடம்பெறும் ஆபாச திரைப்படங்கள், பிரசுரங்கள், மதுபோதை, ஒழுக்கக்கேடான வார்த்தைகள் செயல்களைக் கண்டு தேவதாய் இரத்தக் கண்ணீர் வடிக்காமலா இருப்பாள்?

''நாள்தோறும் கும்பல் கும்பலாக ஆன்மாக்கள் நரக பாதாளத்துக்குச் செல்கிறார்களே. மனந்திரும்பவே மாட்டீர்களா? என கோபி என்ற குருவினூடாக தேவ அன்னை அழுதழுது எச்சரிக்கை விடுப்பதை அன்னை வேண்டுவதை இனியாவது செவிமடுப்போம்.

செபம், தபம், பரித்தியாகம் என அன்னை ஊக்குவிப்பதையாவது வன்னி மண் மக்களுடன் இணைந்து நிற்கப் பாவிப்போமாக.

---

## தேவதாயின்

( 3 ம் பக்க தொடர் )

கொடுத்த வார்த்தைப்பாட்டைப் புதுப்பித்து ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வதாக தீர்மானித்தார்கள். அதன் பிறகு அர்ச். ஜூவாக்கினென்பவரும் அர்ச். அன்னம்மாளும் தங்களுக்கு வைத்த சொத்துக்களை மூன்றாகப் பிரித்து ஒரு பங்கைத் தேவாலயத்துக்கும் ஒரு பங்கைப் பிச்சைக்காரருக்கும், ஒரு பங்கை தமது அவசரத்திற்கும் வைத்துக் கொண்டார்கள். அர்ச். சூசையப்பர் தான் இளம்பிராயத்தில் உழைப்புக்காகக் கற்றுக் கொண்ட தச்சு வேலையைச் செய்ய தன் மனைவியாகிய தேவமாதாவிடத்தில் உத்தரவு கேட்டார். தேவமாதா மறுமொழியாக, ''நாம் எளியவர்களாயிருக்க வேண்டுமென்றும், ஏழைகளுக்கு உதவி செய்ய வெண்டுமென்றும் சுவாமியின் சித்தமாயிருப்பதால் இதைச் செய்யலாமென்றும் உத்தரவளித்தாள்.'' ஏழைகளுக்குப் பிச்சை கொடுப்பதற்கு அவளும் சூசையப்பரிடம் உத்தரவு கேட்டாள். அவருமதை அளித்தார். சுவாமியானவர் தேவமாதா மட்டில் சூசையப்பருக்கு சங்கையும் வணக்கமும் இருக்க வேண்டுமென்றார். அவள் பார்வையைக் கொண்டும் சமுகத்தைக் கொண்டும் வாக்கினால் சொல்லவொண்ணாத பயபக்தி அவரிடத்தில் உண்டாயிற்று. இத் திருமணம் செப்ரெம்பர் எட்டாம் திகதி நிறைவேறினது. அப்போது தேவமாதாவுக்கு பதினாலு வயதும், சூசையப்பருக்கு முப்பத்துமூன்று வயதுமாம்.

(தொடரும்)

## அடொல்போ

(2 ம் பக்க தொடர்)

மடமையை'' ஏற்க வேண்டும். ''நானல்ல கிறிஸ்துவே என்னில் செயலாற்றுகிறார்'' என்று கூறவேண்டும்.

அடொல்போ பெரேஸ் எஸ்தவிலேல் காட்டும் பாதையே இன்று நாமும் பின்பற்றவேண்டிய வழியாகும்.

---

Print : Annai printers, Jaffna

Published by PAX CHRISTI,

St JOSEPHS ASHRAM,

102, Main st, Jaffna.